இது குறித்து மாவட்ட ஆட்சியர் 12—2—1981 அன்று பள்ளி நிர்வாகிகள், ஆசிரியர் மற்றும் மாணவர் பிரதிநிதிகள், கல்வி அதிகாரிகள் மற்ற பிரமுகர்கள் ஆகியோரின் கூட்டத்தைக் கூட்டி பிரச்சினைகள் சம்பந்தமாக சில முடிவுகள் எடுக்கப்பட்டன. அம்முடிவுகளின் அடிப்படையில் பள்ளி 16—2—1981 அன்று திறக்கப்பட்டு சுமுகமாக நடைபெற்று வருகிறது.

இணைப்பு I

[28 ஆம் பக்கத்தில் இனம் 2 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

மதுரை சட்டக் கல்லூரியில் ஆசிரியர் பணியிடங்கள் ஏற்கெனவே போதிய அளவு உள்ளன. மேலும் தற்பொழுது மூன்று இளநிலைப் பேராசிரியர் பணி இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. காலியாக உள்ள பணியிடங்களை விரைவில் பூர்த்தி செய்ய துரித ஏற்பாடுகள் சட்டக் கல்வி இயக்குநர் செய்து வருகின்றனர். மாணவர்களுக்கு எவ்வித கஷ்டமும் இன்றி பருவ முறைத் தேர்வுக்கு உரிய பாடங்கள் நடத்தி முடிக்கப்பட்டுவிட்டன. பி.ஜி.எல். மற்றும் பி.எல். வகுப்புகள் நல்ல முறையில் நடைபெறுகின்றன.

(2) மதுரை மீனாட்சி மாணவியர் அரசினர் கலைக் கல்லூரி வளாகத்திற்குள் சட்டக் கல்லூரி மாணவியர்களுக்காக ரூ. 1.40 லட்சம் தனிக்கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப் பெற்று கட்டிடம் கட்ட தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(3) மதுரை சட்டக் கல்லூரி மாணவர்கள் தற்போது தொழில் பயிற்சி நிலைய மாணவர் விடுதியில் தங்கி வருகிறார்கள். மதுரை வடக்கு தாலுக்கா நல்லாகுளம் கிராமம் சர்வே எண் 134/2-ல் மாணவர்களுக்கு விடுதி கட்ட இடம் ஒதுக்கப்பட்டுள்ளது . . . .
கட்டிடம் விரைவில் கட்ட ஏற்பாடுகள் செய்யப்படும் மேலும் சிற்றுண்டிச் சாலை போன்ற வசதிகள் தற்போதுள்ள மதுரை சட்டக் கல்லூரி கட்டிடத்தில் விரைவில் செய்து தரப்படும்.